# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109491

1. District : திருச்சி PS: ஊ.த.க.பிரிவு திருச்சி Year: 2022 FIR No.: 13 Date: 01.12.2022
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.11.22 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.12.22 Time நேரம் : 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சார்பதிவாளர் அலுவலகம் உமிண் நகர், திருவெறும்பூர் சுமா. 14. கி.மீ கிழக்கு (செ.கி)
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. அசோக்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சுப்பிரமணியன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 3/4/79 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ரியல் எஸ்டேட் (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பாஸ்கரன், சார் பதிவாளர், திருவெறும்பூர் சார்பதிவு அலுவலகம், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில்
இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது /· மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A8 1.12.2022

[illegible] 01/12/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Insp [illegible] Trichy.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ...................No. எண் ..........

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2022–ன் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் 12–ன் தொடர்ச்சி...

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (01.12.2022) காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி திருச்சிராப்பள்ளி, காட்டூர், பாப்பாகுறிச்சி எண்.5/390 பழைய தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் திரு.S.அசோக்குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூர் சார்பதிவக, சார்பதிவாளர் திரு.பாஸ்கரன் மற்றும் புகார்தாரர் திரு.அசோக்குமார் ஆகியோரின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டு, இன்று 01.12.2022 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.13/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் S.அசோக்குமார், த/பெ சுப்பிரமணியன், எண்.5/390, பழையத்தெரு, பாப்பாக்குறிச்சி, காட்டூர், திருச்சி–19. பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம். அய்யா, நான் திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் வட்டம், காட்டூர், பாப்பாக்குறிச்சியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். மேலும், திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், திருவெறும்பூர் நியூ டவுனில் வசித்து வரும் ஜஸ்டீன் பிரபாகர் என்பவர் எனக்கு தொழில் நிமித்தமாக பழக்கம். அவரது மனைவி திருமதி.ஜார்ஜினா ரோஸ் என்பவர் Heavenly Power Ministries என்ற டிரஸ்டுக்கு மேனேஜிங் டிரஸ்டியாக இருந்து வருகிறார். இவர்களது டிரஸ்டுக்கு கல்லறை தோட்டம் அமைக்க இடம் தேவைப்பப்பட்டதால், எனது உறவினர்களுக்கு சொந்தமாக திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பாப்பாக்குறிச்சி கிராம சர்வே எண் 210/2Bல் ஏக்கர் 0.21 சென்ட் நிலத்தினை அதன் உரிமையாளர்களான (1) சரவணபவன் மகன் பழனிவேல், (2)ஆறுமுகம் மனைவி பாப்பு, (3)கண்ணுசாமி மகன் துரை, (4)வைத்தியநாதன் மனைவி இளஞ்சியம் மற்றும் (5)கண்ணுசாமி மகன் புண்ணியமூர்த்தி ஆகியோரிடமிருந்து கிரையம் பெற முடிவு செய்யப்பட்டது. மேற்படி நிலத்தினை விற்பவர்கள் எனது உறவினர்கள் என்பதாலும், நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாலும், திருமதி. ஜார்ஜினா ரோஸ் அவர்கள் தன்பெயரில் கிரையம் செய்வது தொடர்பான பணிகளுக்கு வெளியிடங்களுக்கு அலைய முடியாது என்கிற காரணத்தினால் மேற் சொன்ன நிலத்தினை கிரையம் பெற்று பத்திர பதிவு மற்றும் வருவாய் துறை ஆவணங்களைப்

பெறுவது தொடர்பான அனைத்து பணிகளையும் என்னை முன்னின்று முடித்துக் கொடுக்குமாறு கூறியிருந்தார். மேற்படி நிலமானது விவசாய நிலமாக இருந்த காரணத்தால், 47(A)–படி கிரையபத்திரம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்து, அதன்படி நான் திருமதி. ஜார்ஜினா ரோஸ் கிரையம் பெறும் இடம் தொடர்பான பத்திர Draft தயார் செய்து அதனை எடுத்துக் கொண்டு நேற்று 30.11.2022 காலை சுமார் 11 மணியளவில் சம்மந்தப்பட்ட திருவெறும்பூர் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த சார்பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்களை நேரில் சந்தித்து விபரம் சொல்லி நான் கொண்டு சென்றிருந்த பத்திர Draft–ஐ கொடுத்து நாளை பத்திரம் செய்து கொள்ளலாமா சார் என்று கேட்டேன். சார்பதிவாளர் திரு.பாஸ்கரன் நான் கொடுத்த Draft–ஐ படித்துப்பார்த்துவிட்டு, இந்த இடம் அரசு மதிப்பில் சதுரஅடியில் உள்ளது என்றும், அதன்படி பத்திரப்பதிவு செய்தால் 3 லட்சம் பத்திர செலவு ஆகும், நீங்க 47(A)–படி பத்திரம் போட்டு வெறும் பத்தாயிரத்தில முடிக்கலாம்னு பாக்குறீங்க என்று சொன்னார். அதற்கு நான், இந்த இடம் கல்லறைத்தோட்டம் அமைக்கத்தான் சார் வாங்கறாங்க அதனாலதான்சார் 47(A)–படி பத்திரம் பதிவு செய்ய கேட்கிறோம் என்று சொன்னேன். அதற்கு அவர், நீங்க 47(A)–படி போடுனும்னா என்னோட பார்மாலிட்டிய செஞ்சிடுங்க நான் உங்க வேலைய முடிச்சு கொடுத்திடுறேன் என்று சொன்னார். அதற்கு நான் உங்களுக்கு என்ன சார் பண்ணனும்னு கேட்டேன். அவர், ரியல் எஸ்டேட் பண்றீங்க இது கூட தெரியாதா 47(A)–படி பத்திரம் போடனும்னா ஒரு சென்டுக்கு 5000 ரூபா எனக்கு தனியா கொடுக்கனும்கிறது உங்களுக்கு தெரியாதா, நீங்க 20 சென்டுக்கு பத்திரம் போடுறீங்க, ஒரு லட்சம் கொடுத்திடுங்க என்று சொன்னார். அதற்கு நான், சார், கல்லறைத்தோட்டம் போடத்தான் வாங்குறாங்க பாத்து கொறச்சி சொல்லுங்க சார் என்றேன். அதற்கு அவர், இதுக்கெல்லாம் பேரம் பேசாதீங்க, நான் மேலலெல்லாம் கொடுக்கனும், நிறைய செலவு இருக்கு, ஒரு ரூவா கொடுத்திங்கன்னா முடிச்சி தர்றேன், இல்லன்னா முடியாது என்று கறாராக சொல்லிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, அப்போதைக்கு என்ன செய்வதென்று தெரியாமல் சரிங்க சார் நாளைக்கு பத்திரத்த முடிச்சி கொடுங்க, கொடுத்திடுறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த விசயத்தை திருமதி.ஜார்ஜினா ரோஸ் அவர்களிடம் தெரிவித்தேன். அவரும், நம்ம பொதுக்காரியத்திற்குத்தானே அந்த இடத்தை வாங்குறோம், லஞ்சம் கொடுக்க வேண்டாம், லஞ்ச ஒழிப்புதுறைக்கு போய் நடவடிக்கை எடுங்க என்று சொன்னார். எனவே, 47(A)–படி பத்திரம் பதிவு செய்துதர என்னிடம் லஞ்சம் கேட்ட திருவெறும்பூர் சார்பதிவாளர் திரு.பாஸ்கரன்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (S.அசோக்குமார்) 1.12,2022. Sir, Submitted to the Court of the Hon,ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Tiruchirappalli. Received the

report at 07.00 hrs on 01.12.2022 and made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.13/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 08.00 hrs on 01.12.2022. Sd.xxx (A.PRASANNAVENKATESH) 01.12.2022 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Trichy.

01/12/2022